# DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 93/2018 |
| Deposition of witness for | Prosecution wit. PW.3 |
| Name | இம்மானுவேல் ஜெயசேகர் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 14-12-2022

<u>முதல்விசாரணை</u>

1. நான் தற்போது ஏரல் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 04.12.2016 ம் தேதி நான் ஏரல் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது ஏரல் காவல் நிலைய வட்ட ஆய்வாளர் அவருக்கு உதவியாக நானும் தலைமக்காவலர் தர்மர் மற்றும் முதல் நிலைக்காவலர் ரீகன் ஆகியோர் சகிதம் ரோந்து சென்ற போது ஏரல் காவல் நிலைய குற்ற எண். **நி.கு.எண்.238/2016 u/Sec.392 IPC** மற்றும் **ஏரல் காவல் நிலைய குற்ற எண். 345/2016 u/Sec.392 IPC** வழக்கின் எதிரியான டேவிட் என்ற எட்வர்ட் என்பவரை தேடி ஆறுமுகமங்கலம் பிள்ளையார் கோவில் முன்பு ரோந்து செய்து கொண்டிருந்த போது அங்கு சந்தேகத்தின் பேரில் நடந்து வந்து கொண்டிருந்த நபர் எங்களை கண்டதும்

ஓட முயற்சி செய்தவரை மடக்கி பிடித்து விசாரணை செய்தததில் அவர் மேற்படி வழக்குகளிலும் ஏரல் காவல் நிலையகுற்ற எண் .237/2016 ச/பி, 379 இதச வழக்கில் சம்மந்தப்பட்டு இருப்பதாக ஒப்புக்கொண்டதன் பேரில் மேற்படி வழக்குக்காக எதிரியை 04.12.2016 ம் தேதி காலை 10.45 மணிக்கு ஏரல் காவல் வட்ட ஆய்வாளர் கைது செய்தார்கள்.

3. பின்னர் சாட்சிகள் முன்னிலையில் அவர் காலை 10.45 மணி முதல் 12.45 மணி வரை கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் தாலுகா, இடையற்காடு நடுத்தெரு, குணசிங் மகன் டேவிட் என்ற எட்வர்ட் என்றும் தான் கடந்த 12.07.2016 ம் தேதி மாலை நேரத்தில் ஏரல் காந்தி சிலை பஸ்ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்த வயதான பெண்களிடம் கூட்டத்தோடு சேர்ந்து கொண்டு கழுத்தில் இருந்த 8 பவுண் தங்க செயினை திருடி பின்னர் இருசக்கர வாகனத்தில் தங்கமாள்புரம் வந்து விட்டோம்.

4. அந்த செயினை மாட்டுதாவணியில் பஸ்ஸ்டாண்டில் விற்று அதில் எங்களுக்கு மொத்தம் ரூ. 85000 கிடைத்தது. அதில் ரூ. 5000 செலவு செய்து விட்டு மீதி 80000 க்கு காய்கறிகள் வாங்கி கொண்டு சென்னை சென்று வியாபாரம் செய்தோம். ஆனால் அதில் போட்ட முதலீடு மட்டுமே கிடைத்ததாகவும், அந்த பணத்தை இடையற்காட்டில் மறைத்து வைத்துஇருந்தார்கள். தன்னை அழைத்து சென்றால் அந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்வதாகவும் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னதன் பேரில் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் 1 ராமசாமி, கிராம நிர்வாக அலுவலர் ஆறுமுகமங்கலம், மற்றும் சாட்சி 2 சுயம்பு கிராம உதவி யாளர் ஆறுமுகமங்கலம் ஆகியோர் முன்னிலையில் வட்டக்காவல் ஆய்வாளர் அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார்கள் . அந்த

பணத்தை எதிரி வீட்டு முன்பு உள்ள பச்சைக்கலர் பாலீதின் பையில் சுற்றி வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்தார்கள்.

5. அதில் போலீஸ் பார்ட்டியாகிய நாங்களும் கையெழுத்து போட்டோம் . ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து **அ.சா.ஆ.4** ஆகும்.

6.பிறகு அத்தாட்சி மகஜர் தயார் செய்யப்பட்டு வழக்கு சொத்தை கைப்பற்றினார்கள். இவை அனைத்தும் முதல் நிலைக்காவலர் மாரிமுத்து தயார் செய்த போது நான் உடன் இருந்தேன் . எதிரிகள் இருவரையும் எனக்கு அடையாளம் தெரியும். சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை.

7. போலீசார் முன்னிலையில் கொடுக்கிற ஒப்புதல் வாக்குமூலம் இதச 25 பிரிவின் படி நிலைக்கத்தக்கது அல்ல என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும் உடன் கிராம நிர்வாக அலுவலர்கள் இருந்ததால் செல்லும்.

8. எத்தனை பாலீதின் கவர்களில் நாங்கள் எதிரிகளிடம் இருந்து பணத்தை கைப்பற்றினோம் என்றால் நினைவில் இல்லை . எதிரிகள் எந்த பையில் பணத்தை மறைத்து வைத்து இருந்தார்கள் என்றால் மஞ்சள் கலர் பாலீதின் பையில் வைத்து இருந்தார்கள்

9. எதிரியை கைது செய்து காவல் நிலையத்தில் வைத்து துன்புறுத்திதான் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் வாங்கி உள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் எதிரி கைது செய்ய வில்லை என்றால் சரியல்ல.

10. சம்பவஇடத்தில் வைத்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் வைத்திருந்த ரூ. 80000 எந்த ரூபாய் நோட்டு

என்றால் ரூ.1000 அல்லது ரூ.2000 மா என்று தற்போது நினைவில் இல்லை. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டு உள்ளது என்றால் சரியல்ல.

11. எதிரிகளிடம் இருந்து எந்த விதமான ஒப்புதல் வாக்குமூலமும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக ஒப்புதல் வாக்குமூலம் பெற்று உள்ளேன் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.